[4th August 1966

*திரு. இராம. அரங்கண்ணல் :* சுதந்திர வீரர்கள் சரித்திரம் பற்றி விவரங்கள் சேகரிக்க மாநில அளவில் குழுக்கள் இருக்கின்றனவா? தலைமை தாங்குகிறவர்கள் யார், அங்கம் வகிப்பவர்கள் யார் யார்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. விவரங்கள் என்னிடம் இல்லை. ஒரு சிறிய குழு அமைத்து, அந்தக் குழு இது பற்றிக் கவனம் செலுத்தி வருகிறது.

(Sri M. Kalyanasundaram rose)

MR. SPEAKER : Next question. I wish to remind the hon. Member that we have got 40 questions to be answered to-day. So, I am sorry, I cannot allow more than one minute for each question.

SRI M. KALYANASUNDARAM : Just one supplementary, Sir.

MR. SPEAKER : No, no. I am sorry.

*Children's Encyclopædia*

* 63 *Q.*—SRI V. SANKARAN. Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have proposed to give any aid to the Tamil Valarchi Kazhagam (தமிழ் வளர்ச்சிக் கழகம்) towards their preparation and publication of Children's Encyclopaedia (சிறுவர் கலைக் களஞ்சியம்) in Tamil; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The project "Compilation and Publication of Children's Encyclopædia in Tamil" undertaken by the Tamil Valarchi Kazhagam, Madras is receiving financial aid from both the Government of India and the Madras Government. The Government of India have agreed, in principle, to the payment of Rs. 5.5 lakhs or one half of the actual expenditure on the project whichever is less. This Government have also sanctioned the payment of a grant of Rs. 2 lakhs or 25 per cent of the actual expenditure whichever is less. The grants from both the Government of India and this Government are payable in instalments.

*திரு. வை. சங்கரன் :* தமிழில் சிறுவர் கலைக் களஞ்சியம் தொகுத்து வெளியிடுவதற்கு ஏதாவது காலவரையறை விதிக்கப்பட்டிருக்கிறதா? அந்தத் தொகுப்பைச் சரிபார்க்கவோ, பரிசீலனை செய்யவோ அரசாங்கத்திற்கு ஏதாவது உரிமை இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ் வளர்ச்சிக் கழகம் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள்தான் முன்வந்தார்கள். அவர்கள்தான் அரசாங்க உதவியை நாடினார்கள். அரசாங்கம் இம்மாதிரி உதவி அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறது. அவர்கள் இப்போதே அந்த வேலையை மேற்கொண்டிருக்கிறார்கள்.

4th August 1966]

**புலவர் கா. கோவிந்தன்:** சிறுவர் கலைக் களஞ்சியம் தொகுத்து வெளியிடுகின்ற அந்தக் குழுவில் யார் யார் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவிக்க முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தமிழ் வளர்ச்சிக் கழகம் தான் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே யார் யார் இந்தப் பணியைக் கவனித்து வருகிறார்கள் என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

### கோயில் அர்ச்சகர்களுக்குச் சம்பள உயர்வு.

*64 கேள்வி—**திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள பல பெரிய தேவாலய அர்ச்சகர்கள், ஊழியர்கள் தங்களுக்கு சம்பள உயர்வு கோரி சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டும் முறையிட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** (*a*) The South Indian Archakas Association, Madras in its 16th Annual Conference held in November 1964 at Madras passed a resolution that the Dittams in the temples are too low to meet the necessities of the poojas in the temples, that they may be enhanced, and that the previleges shown on Non-Gazetted Officers may be granted to the Archakas also;

(*b*) The Commissioner, Hindu Religious and Charitable Endowments has issued instructions to the Executive Authorities of Religious Institutions to revise the Dhittam regarding the payment of salaries of Archakas according to the cost of commodities and the income of the institutions.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** பல தேவாலயங்களில் அர்ச்சகர்களுக்கு, முன்பிருந்த முறைப்படி, தானியங்களாகவே வழங்கக்கூடிய நிலை இருந்தது. இப்பொழுது ரேஷன் காரணமாக, வெளியிடங்களிலிருந்து நெல் முதலிய தானியங்கள் போவதற்கு சில சிரமங்கள் காரணமாகவும், நெல் முதலிய தானியங்களை அந்தந்த இடங்களில் கொள்முதல் செய்வதன் காரணமாகவும், அர்ச்சகர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகவும் குறைந்த அளவுக்கே இருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் இவ்வளவாவது வருமான அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்ற நியதியை வகுத்து, இந்து அற நிலைய போர்டாரிலிருந்து தாக்கீது கொடுக்க வழிவகை செய்யப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஊழியர்களுடைய ஊதியம் உயர்த்தப்படுவதுபற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எவ்வளவு தூரம் அதைச் செய்ய முடியும் என்பது அந்தந்த ஸ்தாபனங்களின் வருவாயைப் பொருத்ததாக இருக்கிறது.